தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.127/மா/2021**

**நாள். 03.02.2022**

திரு. சி.அசோகன்
கடலூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
கடலூர் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

கடலூர் மாவட்டம், திருப்பாதிரிபுலியூர், பெரியநாயகி அம்மன் கோயில் தெரு, எண்.7ல் வசிக்கும் திரு.சி. அசோகன் என்பவரின் 20.11.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.11.2021 அன்று பெறப்பட்டு 127/மா/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடலூர் மாவட்டம், திருப்பாதிரிபுலியூர், பெரியநாயகி அம்மன் கோயில் தெரு, எண்.7ல் வசிக்கும் திரு.சி. அசோகன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 20.11.2021 நாளிட்ட தனது மனுவில், கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

“கடலூர் மாநகராட்சியால் 01.02.2021 தேதியில் துவங்கி 09.02.2021 வரை ஒப்பந்ததாரரால் வார்டு 26, வள்ளி விலாஸ் தண்டபாணி தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை போடப்பட்டது. இந்த சிமெண்ட் கான்கிரீட் சாலை தரமற்ற நிலையில் ஜல்லிகள் பெயர்ந்து சிதிலமடைந்த நிலையில் உள்ளது. இது சம்மந்தமாக மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாநகராட்சி ஆணையருக்கு பதிவு அஞ்சல் மூலம் 16.10.2021 தேதியில் மனு அனுப்பினேன். அதனுடன் பொதுமக்களிடம் பெறப்பட்ட கையெழுத்திட்ட மனுவையும் இணைத்து அனுப்பினேன். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் தாங்கள் மாநகராட்சி ஆணையர், பொறியாளர் இவர்கள் இருவர் மீது விசாரணை மேற்கொண்டு மற்றும் அந்த இடத்தினை உயர் அதிகாரியை நியமித்து களப்பணி மேற்கொண்டும் நியாயம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.12.2021 நாளிட்ட கடிதம் மூலம் கடலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கடலூர் மாநகராட்சி ஆணையர் தனது 07.01.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

" மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பணி 14வது நிதிக்குழு மானிய திட்ட நிதி 2019–20ல் தேர்வு செய்யப்பட்டு, கடலூர் நகர்மன்றத் தீர்மானம் எண் 2731 நாள் 31.01.2021ல் அனுமதி பெறப்பட்டு, உரிய ஒப்பந்த விதிகளை பின்பற்றி ரூ.40.25 இலட்சம் மதிப்பீட்டில் உள்ள சிப்பத்திற்குட்பட்ட பணிகளில் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி பணியானது இளநிலைப்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்கள் மேற்பார்வையில் உரிய விதிமுறைகள் பின்பற்றப்பட்டு தரத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணிமேற்கொண்டமைக்கான முந்தைய, பிந்தைய புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. மனுதாரர் திரு சி.அசோகன் அவர்களின் 16.10.2021 ஆம் தேதிய தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் அளித்துள்ள விண்ணப்பத்தில் 11.09.2021 ஆம் தேதிய தகவல் உரிமைச்சட்ட மனுவிற்கு தகவல் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். மற்றும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக்குறிப்பிட்டுள்ளார். மேற்படி 11.09.2021–ம் தேதிய கடிதத்திற்கு 08.10.2021ந்தேதி மனுதாரருக்கு இவ்வலுவலக கடிதம் வாயிலாக தகவல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 08.10.2021–ந் தேதிய பொதுத்தகவல் அலுவலர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள தகவலுக்கு மனுதாரர் 18.10.2021–ந் தேதி இம்மாநகராட்சி கருவூலத்தில் ரூ.24.00 செலுத்தி அளவு புத்தகத்தின் நகல் பெற்றுள்ளார். மேற்படி மனுவிற்கு ஏற்கனவே தகவல் வழங்கப்பட்ட விவரம் தெரிவித்து 15.11.2021–ந் தேதிய கடிதம் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டன. கடித நகல் இணைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது " என தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மற்றும் கடலூர் மாநகராட்சி ஆணையருக்கு 01.02.2022 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 24.01.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் திரு. சி. அசோகன் 01.02.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" கடலூர் மாநகராட்சி வார்டு எண்.26, வள்ளி விலாஸ் தண்டபாணி தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி கடலூர் மாநகராட்சியில் ஒப்பந்ததாரருக்கு கொடுக்கப்பட்டு, அங்கு சிமெண்ட் கான்கிரீட் சாலை போடப்பட்டது. பழைய சாலையை மாற்றாமல், அதன் மேலேயே கான்கிரீட் சாலை போட்டுள்ளனர். சாலை போடப்பட்ட ஒரிரு மாதங்களில் ஜல்லிகள் பெயர்ந்து சிதிலமடைந்துள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் கடலூர் மாநகராட்சி அதிகாரிகளுக்கு புகார் அனுப்பியும் மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, மேற்கண்ட சாலையை பழுது பார்த்து செப்பனிடவும், அதனை அதிகாரிகள் கள ஆய்வு செய்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) எதிர்மனுதாரரான கடலூர் மாநகராட்சி ஆணையர் உள்ளாட்சி தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதால் அவர் சார்பாக கடலூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 01.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" கடலூர் மாநகராட்சி வார்டு 25,26, 28 மற்றும் 29–ல் அமைந்துள்ள ஆனைக்காரன் தெரு, ஆற்றங்கரை வீதி, கமலம் நகர் குறுக்குத் தெரு மற்றும் வள்ளிவிலாஸ் தண்டபாணி தெரு ஆகிய நான்கு தெருக்களுக்கு உரிய ஒப்பந்த விதிகளை பின்பற்றி ரூ.40.25 லட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள்

மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகள் இரண்டு சிப்பங்களாக (2 package) மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட தெருக்களில் வள்ளிவிலாஸ் தண்டபாணி தெருவில் கான்கிரீட் சாலை அமைப்பதற்கான மதிப்பீடு செலவீனம் ரூபாய் 10.94 லட்சமாகும். மேற்கண்ட தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போடப்பட்டு தற்போது உபயோகத்தில் உள்ளன. மேற்கண்ட தண்டபாணி தெருவில் சாலை போடப்பட்டதும், ஈரம் காய்வதற்குள் தனியர் ஒருவர் அச்சாலையில் வாகனத்தை ஓட்டியதால் அச்சாலையில் ஓரிரு இடங்களில் பெயர்ந்து காணப்படுகிறது. மேற்கண்ட பழுதினை, சாலைப்பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரரைக் கொண்டு சரி செய்யப்படும் எனவும், அப்பணியை முடிக்கும் முன்னர், அவர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்டிருக்கும் டேவாணித்தொகையான 1% மற்றும் 5% தொகை ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்படாது எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக மேற்கண்ட சாலைகள் அமைப்பதற்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படங்களையும், சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது உபயோகத்தில் இருந்துவரும் மேற்கண்ட சாலைகளின் புகைப்படங்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கடலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் கடலூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அதில் பின்வரும் விவரங்கள் அறியப்படுகின்றன:

மனுதாரர் தனது மனுவில் கடலூர் வார்டு 26 வள்ளி விலாஸ் தண்டபாணி சாலையில் கடலூர் மாநகராட்சியால் 01.02.2021 தேதியில் துவங்கி 09.02.2021 வரை ஒப்பந்ததாரரால் சிமெண்ட் கான்கிரீட் சாலை போடப்பட்டது என்றும் மேற்கண்ட சாலை தரமற்ற நிலையில், ஜல்லிகள் பெயர்ந்து சிதிலமடைந்துள்ள நிலையில் உள்ளது என்றும் இது தொடர்பான புகைப்படங்களையும் அனுப்பி, மேற்கண்ட சாலையை களப்பணி மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

கடலூர் மாநகராட்சி வார்டு 26–ல் உள்ள வள்ளி விலாஸ் தண்டபாணி தெரு உட்பட 4 தெருக்களுக்கு கான்கிரீட் சிமெண்ட் சாலைகள் அமைத்திட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன. மேற்கண்ட சாலைப்பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.40.25 இலட்சம். இப்பணி 2 சிப்பங்களாக (Package) மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் வள்ளிவிலாஸ் தண்டபாணி தெருவில் கான்கிரீட் சிமெண்ட் சாலை அமைத்ததற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.10.94 இலட்சம் ஆகும்.

இந்நேர்வில் மனுதாரர் அளித்துள்ள புகைப்படங்களையும், கடலூர் மாநகராட்சியால் அளிக்கப்பட்ட சாலைப்பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்பும், பின்பும் எடுத்த புகைப்படங்களையும் ஆராயும்போது, சாலைப்பணிகள் முழுவதும் முடிவடைந்ததை காணமுடிகிறது. ஆனால் மனுதாரர் கூறியவாறு சிமெண்ட் பெயர்ந்து பழுதுகள் காணப்படுகிறது.

மேலும் மேற்கண்ட பணிகளை ஒப்பந்ததாரருக்கு அளித்துள்ள டேவாணித்தொகையில் (Earnest Money Deposit) 1 சதவீதம் மற்றும் 5 சதவீதம் மாநகராட்சியால் பிடித்தம் செய்து வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட புதிதாக போடப்பட்டுள்ள 4 சாலைகளில் ஒன்றான வள்ளி விலாஸ் தண்டபாணி சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை, பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரரைக்கொண்டே சரி செய்திடவும், பழுதுகளை நீக்கும் வரை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய

டேவாணித்தொகையான 1 சதவீதம் மற்றும் 5 சதவீத தொகையை ஒப்பந்ததாரருக்கு அளிக்கக்கூடாது எனவும் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் மேற்கண்ட கடலூர் மாநகராட்சி வள்ளி விலாஸ் தண்டபாணி தெரு மற்றும் 3 தெருக்களில் போடப்பட்டுள்ள சிமெண்ட் சாலைகள் உரிய விதிகளை பின்பற்றி தரமாக போடப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய நகராட்சி நிர்வாக இயக்குநகரத்தைச் சார்ந்த கூடுதல் இயக்குநர்/துணை இயக்குநர் நிலையில் கள ஆய்வு செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. சி.அசோகன்,
7, பெரிய நாயகி அம்மன் கோவில் தெரு,
திருப்பாதிபுலியூர், கடலூர்–2.
கடலூர் மாவட்டம்.

2) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை -600 028.

3) ஆணையர்,
கடலூர் மாநகராட்சி,
கடலூர் – 607 001.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக